வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2829/அ1/2022 நாள் 15.10.2022.

| | |
|---|---|
| பொருள் | கல்வித்துறை – அமைச்சுப் பணி – 2020 -2021 ஆம் கல்வியாண்டு – நிர்வாக சீரமைப்பு – அலுவலகம் / பள்ளிகளில் பணி நிரவல் – அலுவலகப் பணியாளர்கள் - பணியிடங்கள் தோற்றுவித்த விவரம் – மற்றும் பணிநிரவல் – விவரம் அனுப்பக் கோருதல் – தொடர்பாக |
| பார்வை | சென்னை -6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் ( பணியாளர் தொகுதி ) செயல்முறைகள் ந.க.எண் 24689/அ4/இ1/2019 நாள் 14.10.2022 |

மேற்காணும் பொருள் சார்பாக, பார்வையில் காணும் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்ட பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு சார்நிலை அலுவலகங்கள் மற்றும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் நிர்வாக நலனை முன்னிட்டு சீரமைக்கப்பட்டு, பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்டதில் சில பணியிடங்களை கூடுதலாக நிர்ணயித்தும் , சில பணியிடங்கள் நிரவல் காரணமாக குறைத்தும் சரி செய்யப்பட்டது,

அதனடிப்படையில், இத்துடன் இணைத்துள்ள (4 ) நான்கு வகையான படிவங்கள் பூர்த்தி செய்து அனுப்பினால் இம்மாதம் ஊதியம் பெறும் பொருட்டு ஆவண செய்யப்படும்.

**படிவம்** - 1 - முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் (இ.நி.), மாவட்டக் கல்வி அலுவலகம் ( தொ.க) , மாவட்டக் கல்வி அலுவலகம் (த.ப) , ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ( SSA ) , மண்டல உ.க.ஆய்வாளர் அலுவலகம் ( RIP ) 8 வட்டாரக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டத்தில் பணிநிரவல் செய்யப்பட்ட பணியாளர்கள் விவரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**படிவம்** - 2 - வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் பணியிடம் மற்றும் பணியாளருடன் மாவட்டத்திற்குள் பணிநிரவல் செய்யப்பட்ட பணியாளர்கள் விவரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**படிவம்** -3 மாவட்டத்திற்குள் உபரி பணியாளர்களை பணிநிரவல் செய்ய இயலாத பணியிட விவரம் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும் .

**படிவம்** -4 வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் பணியாளர் இன்றி பணியிடம் மட்டும் , மாவட்டத்திற்குள் பணிநிரவல் செய்யப்பட முடியாத பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

மேலும் மேற்காண் விவரங்கள் தங்கள் பள்ளிக்குரியவை அல்லாதவை எனில் இன்மை அறிக்கை கண்டிப்பாக சமர்பிக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு இத்துடன் இணைத்துள்ள படிவத்தினை பூர்த்தி செய்து , எந்தெந்த பணியிடம் தங்கள் அலுவலகம் / பள்ளிகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளவை / புதியதாக இணைத்துள்ள பணியிடம் அரசாணை / பணியாளர் எண் ( IFHRMS ) DDO CODE

விவரங்கள் பூர்த்தி செய்து 17.10.2022 மாலை 4.00 மணிக்குள் வேலூர் ,மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக "அ 1 " பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு வேலூர், மாவட்ட அனைத்து சார்நிலை அலுவலர்கள் மற்றும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் விவரங்கள் உரிய தேதியில் சமர்பிக்காமல் இருப்பின் முழு பொறுப்பு சார்ந்த சார்நிலை அலுவலக அலுவலர்கள் மற்றும் பள்ளி தலைமைஆசிரியர்கள் பறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு**

1. சார்நிலை அலுவலகங்கள் மற்றும் அரசு உயர் /மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணியிட விவரங்கள்.
2. படிவம் 1 முதல் 4 வரை ( 2 நகல்களுடன் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்)

// ஒப்பம் //

// க.முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்
   ( இடைநிலை / தொடக்க கல்வி / தனியார் பள்ளிகள் )
   வேலூர் மாவட்டம்.
2. கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
3. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அலுவலகம்,
   காந்தி நகர், காட்பாடி வேலூர்.
4. மவட்ட உடற்கல்வி ஆய்வாளர்
   வேலூர்.
5. தலைமை ஆசிரியர்கள்,
   அரசு/ உயர் / மேல்நிலைப் பள்ளிகள்
   வேலூர் மாவட்டம்.
6. அலுவலக கோப்பிற்கு